www.Padasalai.Net www.TrbTnpsc.com

T THOOTHUKUDI Reg. No.: 1 5 0 6

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2024

## வகுப்பு-10

காலம் : 3.00 மணி தமிழ் மதிப்பெண்கள்:100

பகுதி - I 15 x 1 = 15

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே .......
அ) பாடிய, கேட்டவர் ஆ) பாடல்;பாடிய இ) கேட்டவர்;பாடிய
ஈ) பாடல்; கேட்டவர்
2. காசிக் காண்டம் என்பது ..........
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
இ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
3. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
அ) கூவிளம், தேமா, மலர் ஆ) கூவிளம், புளிமா, நாள்
இ) தேமா, புளிமா, காசு ஈ) புளிமா, தேமா, பிறப்பு
4. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
5. அருந்துணை என்பதைப் பிரித்தால் .......
அ) அருமை+துணை ஆ) அரு+துணை இ) அருமை+இணை ஈ) அரு+இணை
6. 'கடைத்தெரு எங்குள்ளது'? என்ற வினாவிற்கு 'இப்பக்கத்தில் உள்ளது' எனக் கூறல் .......... விடை.
அ) மறை ஆ) ஏவல் இ) சுட்டு ஈ) நேர்விடை
7. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்
8. மருத நிலத்திற்குரிய சிறுபொழுது ..........
அ) யாமம் ஆ) மாலை இ) எற்பாடு ஈ) வைகறை
9. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது ........
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
10. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
11. விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்தமிழினை இழந்துவிடக்கூடாது என்று எண்ணியவர் .........
அ) கண்ணதாசன் ஆ) இரா.இளங்குமரனார் இ) ம.பொ.சிவஞானம்
ஈ) வீரமாமுனிவர்

பின்வரும் பாடலைப்படித்து வினாக்களுக்கு விடைதருக. (12, 13, 14, 15)

'செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்'

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12. எந்தமிழ்நா என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும் ........
அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா
ஈ) எந்தம்+தமிழ்+நா
13. செந்தமிழ் என்பது ........
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை
ஈ) உம்மைத்தொகை
14. உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?
அ) தம் தாயை ஆ) தமிழ்மொழியை இ) தாய்நாட்டை ஈ) தம் குழந்தையை
15. வேறார் புகழுரையும் – இத்தொடரில் 'வேறார்' என்பது .........
அ) தமிழர் ஆ) சான்றோர் இ) வேற்றுமொழியினர் ஈ) புலவர்

## பகுதி – II

### பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. (21வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்) 4 x 2 = 8

16. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ) சாலைகளின் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையான விதி.
ஆ) மொழிபெயர்ப்பு, மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி மொழிவளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.
17. 'மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! – இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
18. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
19. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.
20. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.
21. 'விடும்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 x 2 = 10

22. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
23. மாஅல்–பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.
24. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
25. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இந்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.
26. தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.
கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். (கலவைச் சொற்றொடராக மாற்றுக)
27. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) மலை–மாலை ஆ) விடு – வீடு
28. கலைச்சொல் அறிக.
அ) Modern literature ஆ) Infrared rays

## பகுதி – III (மதிப்பெண் 18)

### பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2 x 3 = 6

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.
இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க.
30. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



31. பத்தியைப் படித்துப் பதில் தருக.

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள் இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன, சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன.

வினாக்கள்

1) பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன?

2) நிகழ்கலையின் பயன்கள் இரண்டினை எழுதுக.

3) நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன?

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 34 கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2 x 3 = 6

32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

33. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கு பொருந்துவதை குறள் வழி விளக்குக.

34. அ) 'சிறுதாம்பு' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை அடிபிறழாமல் எழுதுக. (அல்லது)

ஆ) 'புண்ணியப் புலவீர்' எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2 x 3 = 6

35. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு – இக்குறட்பாவில் அலகிடுதல் தருக.

36. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

37. தன்மையணியைச் சான்றுடன் விளக்குக.

பகுதி – IV (மதிப்பெண் 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5 x 5 = 25


38. அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. (அல்லது)

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக.



41. தூத்துக்குடி மாவட்டம் வள்ளுவர் நகரில் உள்ள 112 ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் வெற்றிச்செல்வனின் மகன் மகேந்திரன் 10ஆம் வகுப்பு முடித்திருக்கிறான். தேர்வர் தம்மை மகேந்திரனாகக் கருதி நூலக உறுப்பினராக சேர்வதற்கான படிவத்தை பூர்த்தி செய்யவும்.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



42. அ) நயம் பாராட்டுக.

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகணா வியங்குநன் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே – கா.நமச்சிவாயர்

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க

Respected ladies and gentlemen, I am Illangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil Culture. Sangam literature shows that Tamils were best in Culture and Civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil Culture is rooted in the life styles of Tamils throughout India. Srilanka, Malaysia, Singapore, England and worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

## பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி. 3 x 8 = 24

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

44. அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச்சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

(அல்லது)

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை.

மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துக்களை விவரிக்க.

45. அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்கு சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக.

(அல்லது)

ஆ) 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

AMEER TUITION CENTRE
KAYALPATTANAM
PH: 9488005009

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com